# பெருநகர சென்னை மாநகராட்சி
# GREATER CHENNAI CORPORATION

## 2024 - 2025 ஆம்

## நிதி நிலை அறிக்கையில்

## மாண்புமிகு மேயர் அவர்களால்

## அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மீது

## மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விவரம்

# **2024-2025ஆம் நிதியாண்டின் நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு மேயர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விபரம்.**

## கல்வித் துறை

அறிவிப்பு: 1

**2024-2025ஆம் கல்வியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியில் கல்வித்துறையின் கீழ் உள்ள 208 தொடக்கப் பள்ளிகள், 130 நடுநிலைப்பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகளில், LKG வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு பள்ளிச் சீருடைகள் தலா 2 எண்ணிக்கையில் 1,20,175 மாணவ மாணவிகளுக்கு சீருடை துணிகள் ரூ.8.50 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

க.து.ந.க.எண்.அ1/3840/5163/3564/5081/2024ன்படி, LKG முதல் 12ஆம் வகுப்பு வரை சென்னைப்பள்ளிகளில் பயிலும் 1,19,545 மாணாக்கர்களுக்கு **பள்ளிச் சீருடைத் துணிகள்** வழங்கப்பட்டது. இதற்காக ரூ.7.30 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: 2

**2022 – 2023ம் ஆண்டு அறிவிப்புகளில் நடுநிலை, உயர்நிலை, மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், மொத்தம் 159 பள்ளிகளுக்கு ரூ.5.47 கோடி மதிப்பீட்டில் 636 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டதை தொடர்ந்து, 2024–2025-ஆம் கல்வியாண்டில் 117 தொடக்கப் பள்ளிகள் மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்ட**

**1,2,3,7,11,12,14 மற்றும் 15 ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட பகுதியிலிருந்து இணைக்கப்பட்ட பள்ளிகளையும் சேர்த்து மொத்தம் 255 பள்ளிகளுக்கு தலா 4 கேமராக்கள் வீதம் ரூ.7.64 கோடி மதிப்பீட்டில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும்.**

க.து.ந.க.எண்.அ1/3452/2024ன்படி கேமராக்கள் கொள்முதல் செய்ய கல்வித் துறையின் நிர்வாக அனுமதியும், மின் துறையில் 28.11.2024 நாளிட்டு மன்றத்தின் (தீர்மான எண் 505/2024.)ல் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது, விலைப்புள்ளி பெற ELCOT நிறுவனத்திற்கு 29.11.2024 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ELCOT நிறுவனத்திடமிருந்து பதில் பெற்றவுடன், ஒப்பம் கோரப்பட உள்ளது. **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **3**

**2024-2025-ஆம் கல்வியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித் துறையின் கீழ் இயங்கி வரும் 208 தொடக்க மற்றும் 130 நடுநிலைப் பள்ளிகளில் LKG வகுப்பு முதல் 5 - ஆம் வகுப்பு வரை பயிலும் 64,022 மாணாக்கர்களின் சுகாதாரம் மற்றும் பாதப் பாதுகாப்பு நலனை கருத்தில் கொண்டு ரூ.3.59 கோடி மதிப்பீட்டில் அம்மாணாக்கர்களுக்கு 1 செட் Shoe மற்றும் 2 செட் காலுறைகள் வழங்கப்படும்.**

க.து.ந.க.எண்.அ1/6567/2024ன்படி LKG வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 56,845 மாணாக்கர்களுக்கு 1 செட் Shoe மற்றும் 2 செட் காலுறைகள் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக வருவாய் நிதியிலிருந்து ரூ.3.09 கோடி செலவிடப்பட்டுள்ளது. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: 4

**பெருநகர சென்னை மாநகராட்சியில் இராயப்பேட்டையில் செயல்பட்டு வரும் தொழிற்பயிற்சி நிலையத்தில் புதிதாக 2 வகுப்பறைகள் கட்டப்படும். பழுதடைந்த வகுப்பறைகள் பழுது பார்க்கப்படும். புதிய இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்படும். மாணவர்களுக்கு மிதிவண்டிகள், சீருடைகளும் வழங்கப்படும். இப்பணிகளுக்காக ரூ.3.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

1) தொ.ப.நி/061/2024ன்படி தொழிற்பயிற்சி நிலையத்தில் இரண்டு வகுப்பறைகளுக்கான கட்டுமான பணிகள் தற்போது முடியும் தருவாயில் உள்ளது. பழுதடைந்த வகுப்பறைகளை பழுது பார்க்கும் பணி மற்றும் சுவர்களுக்கு வர்ணம் பூசும் பணியும் நடைபெற்று வருகிறது.
2) ITI கல்வி நிலையத்திற்கு தேவையான புதிய இயந்திரங்களுக்கு GEM Portal வழியாக பெறப்பட்ட விலைப் புள்ளியின்படி கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. இதற்கான செலவினம் ரூ.18.00 இலட்சம் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளப் பட்டுள்ளது.
3) 403 சீருடைகள் மற்றும் 117 மிதிவண்டிகள் வழங்கப்பட்டது. இதற்காக ரூ.8.52 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: 5

**2023-2024-ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியோடு புதிதாக இணைக்கப்பட்ட 1,2,3,7,11,12,14 மற்றும் 15 ஆகிய மண்டலங்களுக்கு உட்பட்ட பஞ்சாயத்து யூனியன் மற்றும் நகராட்சி பகுதிகளைச் சேர்ந்த 89 தொடக்கப் பள்ளிகள், 38 நடுநிலைப் பள்ளிகள், 8 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 3 மேல்நிலைப் பள்ளிகள்**

**என மொத்தம் 138 பள்ளிகள் ஒப்படைக்கப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் தற்போது தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை 208 ஆகவும் நடுநிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 130 ஆகவும் உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 46 ஆகவும் மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 35 ஆகவும் உயர்ந்து மொத்த சென்னை பள்ளிகளின் எண்ணிக்கை 419-ஆக உள்ளது. எனவே, தற்போது 2024-2025ஆம் கல்வியாண்டில் 208 சென்னை தொடக்கப் பள்ளிகளுக்கு தலா ரூ.25,000/- வீதமும், 130 சென்னை நடுநிலைப் பள்ளிகளுக்கு தலா ரூ.30,000/- வீதமும், 46 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 35 சென்னை மேல்நிலைப் பள்ளிகள் என 81 பள்ளிகளுக்கு தலா ரூ.50,000/- வீதம் பெருநகர சென்னை மாநகராட்சியின் 419 சென்னை பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு மொத்தம் ரூ.1.32 கோடி வழங்கப்படும்.**

க.து.ந.க.எண்.அ1/4082/2024ன்படி மொத்தம் 417 பள்ளிகளின் சில்லறை செலவினத்திற்காக (Imprest Amount) இந்தியன் வங்கி, வளசரவாக்கம் கிளையில் SNA வங்கி கணக்கு துவக்கப்பட்டு ரூ.1.31 கோடி இருப்பு வைக்கப்பட்டது. இதனை தொடர்ந்து பள்ளி தலைமையாசிரியர்களால் சில்லறை செலவினம் தொடர்பாக மொத்தம் ரூ.55.87 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. ரூ.36.55 இலட்சத்திற்கான பட்டித் தொகை SNA வழியாக தீர்வு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள செலவினத் தொகைக்கு மார்ச் மாதத்தில் பட்டி தீர்வு செய்யப்படும். **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **6**

**பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9-ல் இயங்கி வரும் சென்னை நுங்கம்பாக்கம் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் SCIENCE TECHNOLOGY ENGINEERING MATHEMATICS (STEM) ACADEMY OF EXCELLENCE என்ற பயிற்சி பள்ளி கடந்த**

**2021-2022-ஆம் கல்வி ஆண்டு பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கான பிரத்தியேகமாக பயிற்சி வகுப்புகள் துவங்கப்பட்டு மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. இதன் மூலம் இந்தியாவின் தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம், சட்டம் மற்றும் பேஷன் டெக்னாலஜி (Fashion Technology) ஆகிய துறைகளில் சேர வாய்ப்பினை பெற்றிருக்கின்றனர். இப்பயிற்சி பள்ளியில் 2023-2024-ஆம் கல்வியாண்டில் 12-ஆம் வகுப்பு மாணவர்களுடன், 11-ஆம் வகுப்பு படிக்கும் மாணாக்கர்களும் அப்பயிற்சி பள்ளியில் சேர்க்கப்பட்டு மொத்தம் 80 மாணாக்கர்கள் பயின்று வருகிறார்கள். பெருநகர சென்னை மாநகராட்சி ஆளுகையின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட 11 & 12-ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் தங்கி கல்வி பயிலும் வசதி ஏற்படுத்தி கொடுத்துள்ளதால், மாணாக்கர்களிடையே இத்திட்டம் நல்ல வரவேற்பினை பெற்றுள்ளது. இத்திட்டத்தினை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்தில், போட்டித் தேர்வுகளை எதிர்கொண்டு வெற்றிபெறும் வகையில் மாணாக்கர்களை தயார்படுத்தும் விதமாக 9-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்காக இப்பயிற்சித்திட்டத்திற்கு ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

1) சென்னை பள்ளிகளில் மேல்நிலை கல்வி முடித்து உயர்கல்வி பயில உள்ள 162 மாணவ / மாணவியர்களுக்கு NEET, JEE, Central Univeristy Entrance Test(CUET), Joint Intergrated Programe in Management Admission Test (JIPMAT) மற்றும் பிற கல்வியியல் நிறுவனத்திற்கு விண்ணப்பம் செய்வதற்கான கட்டணத் தொகையை செலுத்த அனுமதி பெறப்பட்டுள்ளது.

2) மேலும், NEET நேர்முக தேர்விற்கான பயிற்சியை அளிக்க, சென்னை பள்ளிகளில் பணிபுரியும் திறன்மிக்க 30 ஆசிரியர்களை (தேவைப்படின் தனியார் ஆசிரியர்களை தற்காலிகமாக அமர்த்தியும்) ஒரு நாளைக்கு ரூ.700/- வீதம் தொகுப்பூதியம் அடிப்படையில் பணியமர்த்தி, வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு ஆகிய மூன்று வட்டாரங்களில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இந்த அறிவிப்பு இக்கல்வியாண்டிலிருந்து செயல்படுத்தப்படும். இதற்காக ரூ.1.00 கோடி செலவினம் ஏற்படும். **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **7**

**பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித் துறையின் கீழுள்ள 208 தொடக்க மற்றும் 130 நடுநிலைப்பள்ளிகள் என மொத்தமுள்ள 338 பள்ளிகளுக்கு தலா ஐந்து பச்சை வண்ணப் பலகைகள் வீதம் மொத்தம் 1690 பச்சை வண்ண பலகைகள் ரூ.92.95 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

க.து.ந.க.எண்.அ1/8992/2024ன்படி கல்வித் துறையிலுள்ள 336 தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கு 1,432 பச்சை வண்ணப் பலகைகள் ரூ.92.87 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **8**

**2024-2025 ஆம் கல்வியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 35 மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் தேசிய மாணவர் படை மற்றும் சாரண, சாரணியர் இயக்கத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு பயிற்சி பெற்று வரும் 2050 மாணாக்கர்களுக்கு ரூ.66.00 இலட்சம் மதிப்பீட்டில் சீருடைகள் வழங்கப்படும்.**

க.து.ந.க.எண்.அ1/7597/2024ன்படி 1,664 எண்ணிக்கையிலான Scout & Guides மாணவர்களுக்கும், 400 NCC மாணவர்களுக்கும் சீருடைகள் Tamil Nadu Textiles Corporation Ltd நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளது. இதற்கான மொத்த செலவு ரூ.66.00 இலட்சம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. மேலும், இவர்களுக்கு சான்றிதழ்கள் மார்ச் மாதம் இறுதியில் வழங்கப்படும். **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **9**

**2024-2025ஆம் கல்வியாண்டில் மொத்தம் 419 சென்னைப் பள்ளிகளில் பயிலும் 1,20,175 மாணாக்கர்களுக்கு தன் விவரக்குறிப்பினை அறிந்து கொள்ளவும் மற்றும் பாதுகாப்பினை கருத்தில் கொண்டும் வண்ண அடையாளஅட்டை (ID Card) ரூ.61.00 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

க.து.ந.க.எண்.அ1/2778/2024ன்படி 417 சென்னை பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணாக்கர்களுக்கும் அடையாள அட்டை வழங்கப்பட்டது. இதற்கான செலவினம் ரூ.61.00 இலட்சம் பட்டி தீர்வு செய்யப்பட்டுள்ளது. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **10**

**ஆழ்வார்பேட்டை மற்றும் புரசைவாக்கம் பகுதிகளில் செயல்பட்டு வரும் இரண்டு சமுதாயக் கல்லூரிகளில் முறையே ரூ.25.00 இலட்சம் செலவில் மகளிர் முன்னேற்றத்திற்கான தொழிற்பயிற்சி அளிக்க பயிற்றுநர் ஊதியம், பயிற்சிக்கான பொருட்கள் மற்றும் கட்டமைப்பு ஏற்படுத்தப்படும். இதற்காக ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

க.து.ந.க.எண்.டி1/9480/2024ன்படி பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் புரசைவாக்கம் மற்றும் ஆழ்வார்பேட்டை ஆகிய இடங்களில் செயல்படும் இரண்டு சமுதாயக் கல்லூரிகளில் 483 மகளிருக்கு கணினி பயிற்சி, தையல் பயிற்சி, ஆரி மற்றும் அழகுக்கலைப் பயிற்சிகள் வழங்கி சான்றிதழ்கள் வழங்கப் பட்டுள்ளது. மேலும், இப்பயிற்சி அளித்த பயிற்றுனர்களுக்கு ஊதியம், பயிற்சிப் பொருட்கள் மற்றும் உள்கட்டமைப்பு அமைக்கப் பட்டுள்ளது. இதற்காக ரூ.50.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **11**

**2023-2024-ஆம் ஆண்டில் சென்னை மேல்நிலைப் பள்ளிகளில் பயின்ற 11ஆம் வகுப்பு மாணவர்களை கல்விச் சுற்றுலா அழைத்துச் சென்றதன் தொடர்ச்சியாக, மாணாக்கர்களுக்கு கற்றல் திறனை மேம்படுத்தும் விதமாக 2024-25ஆம் கல்வியாண்டில் 208 சென்னை தொடக்க பள்ளிகள் மற்றும் 130 நடுநிலைப் பள்ளிகளில் 4 மற்றும் 5-ஆம் வகுப்பில் பயிலும் 24,700 மாணாக்கர்களை, சென்னையைச் சுற்றியுள்ள கிண்டி சிறுவர் பூங்கா, பிர்லா கோளரங்கம், நூற்றாண்டு நூலகம், எழும்பூர் அருங்காட்சியகம், வண்டலூர் உயிரியல் பூங்கா ஆகிய இடங்களுக்கு பள்ளிச் சுற்றுலா அழைத்துச் செல்வதற்காக ரூ.47.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

க.து.ந.க.எண்.அ1/3057/2024ன்படி 2024-25ஆம் கல்வியாண்டில் 206 தொடக்க பள்ளிகளில் 4 (ம) 5-ஆம் வகுப்பு பயிலும் 24,700 மாணாக்கர்களை சென்னை (ம) சென்னை சுற்றியுள்ள சுற்றுலா பகுதிகளான கிண்டி சிறுவர் பூங்கா, பிர்லா கோளரங்கம், அண்ணா நூற்றாண்டு நூலகம், எழும்பூர் அருங்காட்சியகம், வண்டலூர் உயிரியல் பூங்கா ஆகிய இடங்களுக்கு பள்ளிச் சுற்றுலா அழைத்து செல்லப்பட்டனர். இதற்கான செலவினம் ரூ.47.25 இலட்சம். பட்டி தீர்வு செய்யப்பட்டது.**பணி முடிவுற்றது**.

அறிவிப்பு: **12**

**2023-2024 ஆம் கல்வியாண்டில், முதற்கட்டமாக 204 சென்னை மழலையர் பள்ளிகளில் (LKG மற்றும் UKG) பயிலும், குழந்தைகளுக்கு ரூ.19.00 இலட்சம் செலவில் பாடப்புத்தகங்கள் அச்சிட்டு வழங்கப்பட்டது. மேலும், 2024-2025-ஆம் கல்வியாண்டில் 300 சென்னை மழலையர் பள்ளிகளில் (LKG மற்றும் UKG) பயிலும் குழந்தைகளுக்கு பாடத் திட்டத்தினை செம்மையாகவும், மாணவர்களின் ஆர்வத்தை தூண்டும் வகையிலும் செயல்பாடு அடிப்படையிலான கற்றல் (Activity Based Learning), எளிதாக புரிந்து கொள்ளும் வகையில், புதிய பாடத்திட்டங்களுடன், விலையில்லா வண்ணப்புத்தகங்கள் ரூ.40.32 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

க.து.ந.க.எண்.அ1/2853/2024ன்படி புதிய பாடத் திட்டத்தின்படி, **செயல்பாடு அடிப்படையிலான கற்றல்** (Activity Based Learning) விலையில்லா வண்ணப் புத்தகங்கள் அனைத்து மாணவர்களுக்கும் விநியோகிக்கப்பட்டது. இதற்கான தொகை ரூ.40.32 இலட்சம் முழுமையாக செலவிடப்பட்டது. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **13**

**சென்னை பள்ளிகளில் பயின்று வரும் வளர் இளம் பருவத்தில் உள்ள மாணாக்கர்கள் எதிர்கொள்ளும் உளவியல் ரீதியான பிரச்சனைகளை தவிர்ப்பதற்கு கடந்த ஆண்டில் 7 உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம், மாணாக்கர்கள் மற்றும் பெற்றோர்களிடையே நல்ல வரவேற்பு பெற்றதனால், 2024-2025-ஆம் கல்வியாண்டு முதல் அனைத்துப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் பயன்பெறும் விதமாக விரிவுபடுத்தப்பட்டு மாநகராட்சிக்குட்பட்ட 10 வட்டாரங்களுக்கு தலா ஒரு ஆலோசகர் வீதம் 10 ஆலோசகர்கள் தற்காலிக பணியாளர்களாக நியமித்து உளவியல் ரீதியான ஆலோசனை வழங்கப்படும். இதற்காக ரூ.35.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

க.து.ந.க.எண்.அ1/6443/2024ன்படி 35 மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு 10 வட்டாரங்களுக்கு தலா ஒரு ஆலோசகர் வீதம் 10 ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு உளவியல் ரீதியான ஆலோசனைகள் Counselling வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான செலவினம் ரூ.35.00 இலட்சம். பட்டி தீர்வு செய்யப்பட்டுள்ளது. 2024-2025 கல்வியாண்டின் இறுதியில் பணி முடிவடையும். **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **14**

**பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித் துறையின் கீழ் இயங்கும் சென்னைப் பள்ளிகளில், உடற்கல்வியை மேம்படுத்த தேவையான விளையாட்டு உபகரணங்கள் பள்ளிகளுக்கு வழங்கப்படும். மேலும், தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் விளையாட்டில் சிறந்து விளங்கும் மாணாக்கர்களுக்கு அவர்கள் விரும்பும் குத்துச்சண்டை, ஜூடோ, கராத்தே, சதுரங்க விளையாட்டு, Carrom, TAEKWONDO, ATHLETIC போன்ற விளையாட்டுகளில் சிறப்பான பயிற்சி அளிக்க தகுதி வாய்ந்த பயிற்சியாளர்கள்**

**தொகுப்பூதியத்தின் அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு 2024-2025-ஆம் கல்வியாண்டில் 6 மாதம் பயிற்சிகள் வழங்கவும், விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்காகவும், மேற்கூறிய போட்டிகளில் கலந்துக்கொள்ள ஏதுவாக மாணாக்கர்களை பயிற்சியாளர் அழைத்துச் சென்று வரும் செலவினங்களுக்காகவும் ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

க.து.க.எண்.அ1/5029/2024 வழியாக, உடற்கல்வியை மேம்படுத்த **தேவையான விளையாட்டு உபகரணங்கள்** 417 பள்ளிகளுக்கு வழங்கப்பட்டது. 29 பள்ளிகளில் பயிலும் 1,500 மாணவிகளுக்கு 6 மாத காலம் தகுதி வாய்ந்த பயிற்சியாளர்களால் கராத்தே பயிற்சி அளிக்கப்பட்டது. பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் பச்சை வண்ண பட்டை வழங்கப்பட்டது. இதற்கான செலவினம் ரூ.30.00 இலட்சம். பட்டி தீர்வு செய்யப்பட்டுள்ளது. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **15**

**2024-2025 ஆம் கல்வியாண்டில் சென்னை தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கொண்டாடப்படும், பள்ளி ஆண்டு விழாக்களுக்கு, பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு மேயர், மரியாதைக்குரிய துணை மேயர், மாமன்ற உறுப்பினர்கள், உயர் அலுவலர்கள் மற்றும் பள்ளியில் பயின்ற முன்னாள் மாணாக்கர்கள் ஆகியோர்கள் அழைக்கப் படுவார்கள். இவ்விழாக்களில் மாணவர்களின் படைப்பாற்றல் மற்றும் பள்ளிகளின் முன்னேற்றம் ஆகியவற்றை காட்சிப்படுத்தி பாராட்டிடவும், மாணாக்கர்களின் வளர்ச்சி மற்றும் வழிகாட்டும் விதமாக பள்ளி ஆண்டு விழா விமரிசையாக கொண்டாட 419 சென்னை பள்ளிகளுக்கு ரூ.28.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

க.து.ந.க.எண்.அ1/10456/2024ன்படி 206 தொடக்கப் பள்ளி, 130 நடுநிலைப் பள்ளி, 46 உயர்நிலைப் பள்ளி மற்றும் 35 மேல்நிலைப் பள்ளி ஆக மொத்தம் 417 சென்னை பள்ளிகளில், பள்ளி ஆண்டு விழா கொண்டாட அந்தந்த தலைமை ஆசிரியர்களின் வங்கி கணக்கில் மொத்தம் ரூ.27.00 இலட்சம், செலுத்தப்பட்டுள்ளது. ஆண்டு விழாக்கள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. **பணி முடிவுற்றது**.

அறிவிப்பு**: 16**

**பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் தற்போது Gender Club செயல்பட்டு வரும் 92 நடுநிலை, 38 உயர்நிலை, 32 மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு கற்றலை எழுத்து வடிவமாக நோக்கும் வகையில் சிந்தனை சிறக்க “தடையை உடை” என்னும் விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டு அதற்குரிய புத்தகங்கள் கொள்முதல் செய்து வழங்குவதற்காகவும் மற்றும் அதற்கான பயிற்சிக்காகவும் ரூ.22.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்**.

C.S.C.L.No.105/2024ன்படி 262 சென்னை பள்ளிகளில் Gender Club ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த கிளப் வழியாக 8ஆம் வகுப்பு மாணாக்கர்களுக்கு “தடையை உடை” என்ற அடிப்படையில், சமத்துவ குழு மற்றும் 2 விதமான Board விளையாட்டுகள், சிறப்பு திட்டங்கள் துறையின் மூலம் நடத்தப்பட்டது. இதற்கான செலவினம் SMART CITY (CITIIS) FUND மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **17**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மண்டலங்களிலும் உள்ள 208 தொடக்கப்பள்ளிகளில் பயிலும் 43,001 மாணாக்கர்கள் மற்றும் 130 நடுநிலைப்பள்ளிகளில் பயிலும் 32,792 மாணாக்கர்கள் பயன் பெறும் வகையில், அவர்கள் தம் வாசிப்பு மற்றும் எழுத்துத்திறன்களை மேம்படுத்த, மொழிப் பாடங்களாகிய தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் திறன்களை வளர்க்கவும் மற்றும் கணிதப் பாடத்தில் அடிப்படைக் கணிதத் திறன்களை வளர்த்துக் கொள்ளும் வகையில் அப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்து, அப்பயிற்சியின் வாயிலாக பள்ளி ஆசிரியர்கள், அவர்தம் திறன்களை வளர்த்துக்கொள்ள ஏதுவாகவும், அப்பயிற்சியின் மூலம் ஆசிரியர்கள் பெற்ற கற்றலின் அடிப்படையில், மாணாக்கர்களுக்கு போதிக்க ஏதுவாக ஆசிரியர்களுக்கு கையேட்டுடன் கூடிய பயிற்சிகள் ரூ.15.00 லட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

க.து.ந.க.எண்.அ1/6292/2024ன்படி சென்னை தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பணிபுரியும் 1,585 இடைநிலை ஆசிரியர்களுக்கு தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதப் பயிற்சி வழங்கப்பட்டது. இதற்காக ரூ.15.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **18**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட தொடக்கப் பள்ளிகளில் 2024-2025-ஆம் கல்வியாண்டில் மாணாக்கர்களின் எண்ணிக்கையின் விகிதாச்சாரத்திற்கு ஏற்ப முதற்கட்டமாக 70 தொடக்கப் பள்ளிகளிலும், 70 நடுநிலைப் பள்ளிகளிலும் பயின்று வரும் மழலையர் வகுப்பு (LKG, UKG) மாணாக்கர்களுக்கு, தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களை எளிதாகவும், மகிழ்வுடனும், உற்சாகமுடனும் கற்க ஏதுவாக அம்மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் ரூ.14.00 லட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

க.து.ந.க.எண்.அ1/3024/2024ன்படி 140 தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்கு Activity Based Learning கற்றல் உபகரணங்கள் TANSI நிறுவனத்தின் மூலம் கொள்முதல் செய்து பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதற்கான செலவினம் ரூ.14.00 இலட்சம். பட்டி தீர்வு செய்யப்பட்டுள்ளது. **பணி முடிவுற்றது..**

அறிவிப்பு: **19**

**2024-2025-ஆம் கல்வியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித் துறையின் கீழ் இயங்கும் 46 உயர்நிலைப் பள்ளிகளில் முதல் கட்டமாக 5 உயர்நிலைப் பள்ளிகளிலும் 35 மேல்நிலைப் பள்ளிகளில் 6 மேல்நிலைப் பள்ளிகளிலும் பள்ளி வேலை நாட்களில் நடைபெறவுள்ள காலை வழிபாட்டுக் கூட்டம் மற்றும் கலை நிகழ்ச்சியின் போது பள்ளி மாணாக்கர்கள் இசைக்கக் கூடிய வகையில் இசைக்கருவிகள் வழங்க 11 பள்ளிகளுக்கு தலா ரூ.1.00 இலட்சம் வீதம் ரூ.11.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

க.து.ந.க.எண்.அ1/6442/2024ன்படி 5 உயர்நிலைப் பள்ளி மற்றும் 6 மேல்நிலை பள்ளிகளுக்கு ரூ 11.00 இலட்சம் செலவில் இசைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளது. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **20**

**சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 10-ஆம் வகுப்பு மாணாக்கர்கள் அரசுப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று, தொடர்ந்து 11-ஆம் வகுப்பு மேல்நிலைக்கல்வியை சென்னைப் பள்ளிகளிலேயே தொடரும் 50 மாணாக்கர்களை கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்வது வழக்கம்.**

**2022-2023-ஆம் கல்வியாண்டில் தலைநகரான டெல்லிக்கு மாணாக்கர்களை சுற்றுலா அழைத்துச் சென்று வந்ததை போன்று 2023-24ஆம் கல்வியாண்டில் பயின்று வரும் 10 ஆம் வகுப்பு மாணாக்கர்களை மேற்கூறியவாறு 11ஆம் வகுப்பில் சேரும் மாணாக்கர்களில் 50 மாணாக்கர்களை ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO), மும்பை பாபா அணு ஆராய்ச்சி மையம் (BARC) மற்றும் கூடங்குளம் அணு மின் நிலையம் போன்ற இடங்களுக்கு சுற்றுலா அழைத்துச் செல்ல ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

க.து.ந.க.எண்.அ1/3498/2024ன்படி அரசுப் பொதுத் தேர்வில் 10ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்று சென்னைப் பள்ளியிலேயே 11ஆம் வகுப்பை தொடர்ந்துள்ள 50 மாணவர்களை, கூடங்குளம் மற்றும் மகேந்திரகிரி (SRO) ஆகிய இடங்களுக்கு அழைத்து செல்லப்பட்டனர். இதற்காக ரூ.6.03 இலட்சம் மதிப்பீட்டில் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது, மீதமுள்ள தொகை ரூ.3.07 இலட்சம் முன்பணமாக பெற்று 11ஆம் வகுப்பு மாணவர்களை மார்ச் மாத இறுதியில் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவார்கள். **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **21**

**2024 -2025 ஆம் கல்வியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியில் விரிவாக்கம் செய்யப்பட்ட பள்ளிகளை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுத்து 8 உயர்நிலை மற்றும் 3 மேல்நிலைப்பள்ளி என மொத்தம் 11 பள்ளிகளுக்கு நகல் எடுக்கும் வசதியுடன் கூடிய பிரிண்டர்கள் தலா ஒன்று வீதம் 11 பிரிண்டர்கள் ரூ.5.50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

க.து.ந.க.எண்.அ1/4284/2024ன்படி ELCOT நிறுவனம் மூலம் நகல் எடுக்கும் வசதியுடன் கூடிய பிரிண்டர்கள் ரூ.5.50 இலட்சம் செலவில் கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளது. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **22**

**2024-2025 ஆம் கல்வியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ளவும், எதிர்வரும் உடல் மற்றும் மன ரீதியான பிரச்சனைகளைத் தவிர்க்கவும், பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களை தலைவர்களாக கொண்ட "குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கள்" அனைத்து சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஏற்படுத்தப்படும்.**

க.து.ந.க.எண்.உ.க.அ10/சிறப்பு/2024ன்படி குழந்தைகள் பாதுகாப்பு குழு அமைப்பதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டு, குழு அமைக்கப்பட்டது, இக்குழுவின் வழியாக மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு மாதமும் உடல் மற்றும் மன ரீதியான பிரச்சனைகளைத் தவிர்ப்பதற்கான விழிப்புணர்ச்சி வழங்கப்பட்டு வருகிறது. 2024-2025 ஆம் கல்வியாண்டு இறுதி வரை வழங்கப்படும். **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **23**

**சென்னை தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் சமூக நலன் கருதி அவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்கள் பயன்படுத்தும் பொருட்களின் கழிவுகளை பள்ளி வளாகத்தில் குப்பை கொட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட பகுதியில் அல்லது தொட்டியில் மக்கும் மற்றும் மக்காத**

**குப்பைகளாக தரம் பிரித்தளிக்கும் செயல்பாட்டை ஆசிரியர்கள் அறிவுறுத்த வேண்டும். இதனை 1 முதல் 12 -ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு வாரமும் புதன் கிழமை அன்று மதிய உணவு இடைவேளை முடிந்து தொடங்கும் முதல் பாட வேளையில் 15 நிமிடங்கள் காகித குப்பைகள், நெகிழிகள் (Plastics) மற்றும் உணவுக் கழிவுகளை முறையாக பிரித்து அவற்றை மறுசுழற்சி மூலம் எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பான விழிப்புணர்வு வகுப்புகளை நடத்த அந்தந்த பள்ளி தலைமையாசிரியர்களால் ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படும். இவ்விழிப்புணர்வினால் மாணாக்கர்களுக்கு சமூகத்தில் சமூக நலன் குறித்த அக்கறையில் கூடுதல் கவனம் ஏற்படுத்த வாய்ப்பாக அமையும்.**

க.து.ந.க.எண்./சிறப்பு/2024ன்படி மறுசுழற்சி மூலம் காகித குப்பைகள், நெகிழிகள் மற்றும் உணவுக் கழிவுகளை முறையாக பிரிப்பது குறித்த சுற்றறிக்கை பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன்படி மாணவர்களுக்கு மக்கும் குப்பை, மக்காத குப்பை பற்றியும், நீலம் (ம) பச்சை வண்ண குப்பை தொட்டியை பராமரிப்பது குறித்தும், விழிப்புணர்வு, பேரணி, நடனம் மற்றும் நாடகம் வாயிலாக மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. **பணி முடிவுற்றது**

அறிவிப்பு: **24**

**2024-2025-ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் பயின்று வரும் மாணவ மாணவர்களிடையே கற்பனைத்திறன், படைப்பாற்றல், வாசிப்புத்திறன் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கத்துடன் பள்ளி நூலகங்கள் இயக்கி வரும் பள்ளிகளுக்கு “நல்நூலகப்பள்ளி” என்ற பாராட்டுச்சான்றிதழ் வழங்கப்படும்.**

க.து.ந.க.எண்.பி3/சிறப்பு/2024ன்படி பள்ளியில் நூலகப்பயன் பாட்டையும், புத்தகங்கள் வாசிக்கும் திறனையும் மேம்படுத்தும் விதமாக, ஒவ்வொரு உதவி கல்வி அலுவலரின் கீழ் இயங்கும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை (ம) மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து, மொத்தமாக 40 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பள்ளிகளுக்கு **"நல்நூலகப்பள்ளி"** என்ற பாராட்டுச் சான்றிதழ் ஏப்ரல் 2025ல் வழங்கப்படும். **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **25**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் உள்ள நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 8ஆம் வகுப்பு மற்றும் 9ம் வகுப்புகளில் பயின்று வரும் மாணாக்கர்களிடையே பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் கடந்த ஆண்டு பாலின குழுக்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை விரிவாக்கம் செய்யப்பட்ட மண்டலங்களான 1,2,3,7,11,12,14 மற்றும் 15-லிருந்து இணைக்கப்பட்ட நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 2024-2025-ஆம் கல்வியாண்டில் 8-ஆம் வகுப்பு மற்றும் 9-ஆம் வகுப்புகளில் பயின்று வரும் மாணாக்கர்களிடையே பாலின குழுக்களை ஏற்படுத்த அப்பகுதிகளைச் சார்ந்த 49 பள்ளி ஆசிரியர்களுக்கு Gender Club மூலம் பயிற்சி வழங்கப்படும்.**

க.து.ந.க.எண்.அ1/7912/2024ன்படி விரிவுப்படுத்தப்பட்ட பகுதியில் உள்ள நடுநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்கு பாலின குழுக்கள் அமைப்பது குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. இதன்படி 8ஆம் வகுப்பு மற்றும் 9ஆம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு பாலின விழிப்புணர்ச்சி அளிக்கப்பட்டு வருகிறது. 2024-2025 ஆம் கல்வியாண்டு இறுதியில் முடிவடையும். **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: 26

**2024-2025-ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் 1,20,175 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். அவர்களின் இடைநிற்றலை முற்றிலும் தவிர்க்கும் நோக்கோடு அனைத்து மாணவர்களின் வருகையில் கவனம் செலுத்தி மாணாக்கர்களின் வருகையை (EMIS) 95 விழுக்காட்டிற்கு மேல் உயர்த்திட உழைக்கும் பள்ளிகளுக்கு "Excellent school" என்ற பாராட்டுச்சான்றிதழ் வழங்கப்படும்.**

க.து.ந.க.எண்.பி3/சிறப்பு/2024ன்படி மாணாக்கர்களின் வருகை பதிவை EMIS Portal மூலம் ஆய்வு செய்து 95 விழுக்காட்டிற்கு மேல் உள்ள பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிகளுக்கு "Excellent school" என்ற பாராட்டு சான்றிதழ் வழங்கப்படும். **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: 27

**சென்னைப் பள்ளிகளில் மழலையர் வகுப்பில் இரண்டாம் ஆண்டு (UKG) பயின்று மழலையர் படிப்பை நிறைவு செய்யும் 5944 மாணவ, மாணவியர்களுக்கும், கற்றலைச் சிறப்பாக நிறைவு செய்தமையைப் பாராட்டியும் ஒன்றாம் வகுப்பில் சேருவதற்கான முழு தகுதியைப் பெற்றமையை பாராட்டியும் அவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் விழா நடத்தி, மாணவ மாணவியர்களுக்கு பட்டம் சான்று வழங்கப்படும்.**

க.து.ந.க.எண்.அ1/909/2025ன்படி மழலையர் வகுப்பில் இரண்டாம் ஆண்டு (UKG) பயின்று மழலையர் படிப்பை நிறைவு செய்யும் 5,944 மாணவ, மாணவியர்களுக்கு "பட்டம்" மற்றும் சான்று மாண்புமிகு மேயர் தலைமையில் மார்ச் மாதம் இறுதிக்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான செலவினம் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. **பணி நடைபெறுகிறது.**

## பொது சுகாதாரம்

அறிவிப்பு: 28

**கத்திவாக்கம் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு மேம்பட்ட உயர்தர மருத்துவ சிகிச்சை அளிக்க, கத்திவாக்கம் நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையம் (UPHC) 10 படுக்கைகளுடன் மேம்படுத்தப்படும். மேலும், சுவாசம், தோல், காது, மூக்கு மற்றும் தொண்டை நோய்கள் போன்றவற்றால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு வாரம் ஒருமுறை, சிறப்பு மருத்துவர்களை கொண்டு சிகிச்சை அளிக்கப்படும். இதற்கு ரூ.3.00 கோடி செலவினம் மேற்கொள்ளப்படும்.**

கத்திவாக்கம் நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையம் (UPHC) இடிக்கும் பணி முடிந்து 10 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டடத்துறை மூலம் 13.03.2024 அன்று துவங்கப்பட்டு ரூ.1கோடி மதிப்பீட்டில் M/s. ARS construction என்ற நிறுவனத்தின் மூலம் கட்டுமான பணி முடிவடைந்தது. இக்கட்டடத்தின் முதல் தளத்தில் கூடுதல் பணிகள் மேற்கொள்ள வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் மூலம் ரூ.2.00 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. பணியாணை திருவாளர் அசோக்குமார் அவர்களுக்கு வழங்கப்பட்டு பணி நடைபெற்றுவருகிறது. மேலும், தரை தளத்தில் கூடுதலாக இரண்டு அறைகள் கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது. இம்மருத்துவமனையின் கட்டுமான பணிகள் நிறைவு பெற்றவுடன் சுவாசம், தோல், காது, மூக்கு மற்றும் தொண்டை நோய்கள் போன்றவற்றால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு வாரம் ஒருமுறை சிகிச்சை அளிக்க சிறப்பு மருத்துவர் நியமிக்கப்படுவார்கள். **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **29**

**முதற்கட்டமாக 113 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.5.09 கோடி மதிப்பீட்டில் ஜெனரேட்டர் கொள்முதல் செய்து வழங்கப்படும்.**

98 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு டீசல் ஜெனரேட்டர் கொள்முதல் செய்ய14 ஒப்பம் கோரப்பட்டு 12 ஒப்பங்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 2 ஒப்பங்கள் 22.01.2025 அன்று திறக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. மார்ச் மாத இறுதியில் பணி ஆணை வழங்கப்படும். பணியின் மொத்த மதிப்பு ரூ.7.10 கோடி ஆகும். **பணிகள் நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **30**

**பெருநகர சென்னை மாநகராட்சி, சுகாதாரத் துறையின் கீழ் வரும் நகர்ப்புர சமுதாய நல மையங்கள் (UCHC), மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் (UPHC) மற்றும் சுகாதார & நல வாழ்வு மையங்களில் பணிபுரியும் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த சுகாதார பணியாளர்களுக்கு, மருத்துவம் சார்ந்த பயிற்சி அளிக்க 15 மருத்துவ மண்டலங்களுக்கும் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் மடி கணினியுடன் கூடிய LCD Projector கொள்முதல் செய்து வழங்கப்படும்.**

பொ.சு.து.ந.க.எண்.சி14/1053-1/2024ன்படி, மடிகணினியுடன் கூடிய LCD Projector கொள்முதல் செய்ய மின்துறை மூலம் அனுமதி பெறப்பட்டு ELCOT நிறுவனத்திற்கு RTGS மூலம் ரூ.22.89 இலட்சம் செலுத்தப்பட்டு மடி கணினியுடன் கூடிய LCD Projector கொள்முதல் செய்யப்பட்டு மாண்புமிகு மேயர் அவர்களால், மண்டலம்-1 முதல் 15 வரையுள்ள மண்டல சுகாதார அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **31**

**140 நகர்ப்புர சுகாதாரம் மற்றும் நல வாழ்வு மையங்களில், மின் தடை ஏற்படும் போது, தடையின்றி மருத்துவ சேவைகள் வழங்கும் வகையிலும், சிகிச்சை பெறுபவர்கள் / பணியாளர்களின் பாதுகாப்பு கருதியும், மின் இன்வெர்ட்டர்கள் ரூ.4.20 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து அமைக்கப்படும்.**

140 நகர்ப்புர சுகாதார மற்றும் நல வாழ்வு மையங்களில், மின்னாக்கிகள் (Generator) நிறுவ 15 எண்ணிக்கையிலான ஒப்பங்கள் கோரப்பட்டது. 12 ஒப்பங்களுக்கு பணியாணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெறுகிறது. மீதமுள்ள 3 ஒப்பங்கள் 16.01.2025 அன்று திறக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. பணியாணை வழங்கப்பட்டு விரைவில் மின்னாக்கிகள் (Generator) பொருத்தும் பணிகள் துவங்கப்படும். இதற்கான பணி மதிப்பீட்டு தொகை 5.87 கோடி ஆகும். **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **32**

**சாலைகளில் சுற்றித்திரியும் கால்நடைகளை கட்டுப்படுத்த கால்நடைகளை பிடிக்கும் பணிக்காக 1,2,3,4,7, 11,12,14 மற்றும் 15 ஆகிய 9 மண்டலங்களுக்கு, தலா 5 நபர் வீதம் 45 தற்காலிக பணியாளர்கள், சுய உதவி குழுக்கள் மூலம் நியமிக்கப்படுவார்கள். இதற்காக வருடத்திற்கு ரூ.1.16 கோடி தொடர் செலவினமாக இருக்கும்.**

பொ.சு.து/கா.ம.பி/அ2/0206/2024 தற்காலிக பணியாளர்களை நியமிக்க ஆணையர் அவர்களின் ஆணை மற்றும் மன்றத் தீர்மானம் பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்கண்ட மண்டலங்களில் 01.07.2024 முதல் மாடு பிடிக்கும் பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர் (தொடர் பணியாகும்). **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **33**

**பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு நோய் மேலாண்மை மற்றும் தேசிய நலத் திட்டங்களின் சமீபத்திய மாற்றங்கள் மற்றும் வழிகாட்டுதல் குறித்து மருத்துவ அலுவலர்களுக்கு மூன்று மாதத்திற்கு ஒரு முறை தொடர் மருத்துவ கல்வி (Continuing Medical Education) குறித்த பயிற்சி தொடர்ச்சியாக வழங்கப்படும். இப்பயிற்சிக்கு ரூ.2.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.**

பொ.சு.து.ந.க.எண்.சி14/1053-4 நாள் 04.10.2024 பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கான நோய் மேலாண்மை மற்றும் தேசியத்திட்டங்கள் குறித்து பயிற்சிகள் வழங்க கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் ஒப்புதல் பெற்று நான்கு கட்டங்களாக பயிற்சி அளிக்கப்பட்டது. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **34**

**மண்டலம்-10, கோட்டம்-139, எண் : 5, ராகவாரெட்டி காலனி, 2வது இணைப்புத் தெரு, ஜாபர்கான் பேட்டை, சென்னை-83ல் துணை மருந்து பண்டக சாலை சோதனை முறையில் அமைக்கப்படும். இதற்கு ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

ம.அ.10.சு.து.ந.க.எண்/7853/2024. மண்டலம்-10, கோட்டம்-139, எண் : 5, ராகவாரெட்டி காலனி, 2வது இணைப்புத் தெரு, ஜாபர்கான் பேட்டை, சென்னை-83ல் துணை மருந்து பண்டக சாலை கட்டடம் கட்டுவதற்கு ரூ.1.62 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெற்று ஒப்பம் திறக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. பணியானை வழங்கப்பட்டு விரைவில் பணி துவங்கப்படும். **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **35**

**பெருநகர சென்னை மாநகர எல்லைக்குள் சுற்றித் திரியும் தெரு நாய்கள், பொது மக்களை அச்சுறுத்துவது மற்றும் கடிப்பதால் ரேபிஸ் நோய் தாக்கம் ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படவும் வாய்ப்புள்ளது, எனவே, தெரு நாய்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்த, புதியதாக 7 நாய் பிடிக்கும் வாகனம் கூடுதலாக கொள்முதல் செய்து பிடிக்கப்படும் நாய்களுக்கு கருத்தடை சிகிச்சை செய்வதன் மூலம் நாய் இனப்பெருக்கம் கட்டுப்படுத்தப்பட்டு பொது மக்களின் நலன் காக்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ.70.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

M1/0754/2024இயந்திர பொறியியல் துறை மூலம் 7 நாய்பிடிக்கும் வாகனங்கள் ரூ.66.29 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **36**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் சுற்றித் திரியும் தெரு நாய்களுக்கு ஏற்படும் வெறி நாய் கடி நோய் பாதிப்பிலிருந்தும், அதன் மூலம் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் தடுக்கவும் வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு ஆகிய வட்டாரங்களுக்கு தலா ஒன்று வீதம் மூன்று நடமாடும் கால்நடை தடுப்பூசி மருந்து செலுத்தும் வாகனங்கள் (Mobile Veterinary Vaccination Vehicles) ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.**

M1/0876/2024இயந்திர பொறியியல் துறை மூலம் கால்நடை தடுப்பூசி மருந்து செலுத்தும் வாகனங்கள் (Mobile Veterinary Vaccination Vehicles) மூன்று எண்ணிக்கையில் ரூ.59.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்ய 18.12.2024 அன்று பணியாணை வழங்கப்பட்டது. 30.03.2025க்குள் வாகனங்கள் பெறப்படும். **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: 37

**பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத் துறை தொற்று நோய் மருத்துவமனையில் ANM மாணவிகளுக்காக புதிய விடுதிக்கான கட்டடம் ரூ.3.00 கோடி செலவில் கட்டப்படும்.**

கட்டடத் துறையின் வழியாக, தொற்று நோய் மருத்துவமனையில் ANM மாணவிகளுக்காக புதிய விடுதிக்கான கட்டடம் கட்டுவதற்கு ரூ.4.90 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு 04.11.2024 அன்று பணியாணை வழங்கப்பட்டுள்ளது. கட்டட பணிகள் நடைபெற்றுவருகின்றன. **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: 38

**பெருநகர சென்னை மாநகராட்சியில் வளர்க்கப்படும் மாடுகளை முறைப்படுத்த போதிய இடவசதி மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளைக் கொண்டுள்ள மாட்டு உரிமையாளர்களின் மாட்டுத் தொழுவங்களுக்கு உரிமம் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.**

ஒவ்வொரு மண்டலத்திலும், நவீன மாட்டு கொட்டகை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி நிறைவு பெற்ற பின்னர், மாட்டுத் தொழுவங்களுக்கும், மாட்டின் உரிமையாளர்களுக்கும் உரிமம் வழங்குவதற்கான பணிகள் தொடங்கப்படும். **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: 39

**பெருநகர சென்னை மாநகராட்சியில், தெருநாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த, கூடுதலாக இரண்டு நாய் இனக்கட்டுப்பாட்டு மையங்கள் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் துவக்கப்படும்.**

பொசுது/கா.ந.பி/அ2/0475/2024நாய் இனக்கட்டுப்பாடு மையங்கள் அமைக்க மண்டலம்–2ல் 9.12.2024 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு உள்ளது. பணி நடைபெறுகிறது. மண்டலம்-14, கோட்டம்-184 பெருங்குடியின் இப்பணிக்கு ஒப்பம் கோரப்பட்டு 28.03.2025 அன்று திறக்கப்பட உள்ளது. பணியானை வழங்கி பணி துவங்கப்படும். **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **40**

**கால்வாய்களில் உருவாகும் கொசுப்புழுக்களை அழிப்பதற்கு கொசுப்புழு நாசினி தெளிக்கும் பணிக்கு ரூ.80,000/- வீதம் 15 மண்டலங்களுக்கு ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு Vehicle Mounted Power Sprayer-வுடன் கூடிய துணை கருவிகள் (Accessories) கொள்முதல் செய்து வழங்கப்படும்.**

கால்வாய்களில் உருவாகும் கொசுப்புழுக்களை அழிப்பதற்கு கொசுப்புழு நாசினி தெளிக்கும் பணிக்கு 15 மண்டலங்களுக்கு 15 எண்ணிக்கையிலான Vehicle Mounted Power Sprayer-வுடன் கூடிய துணை கருவிகள் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து மண்டலங்களுக்கு வினியோகம் செய்யப்பட்டது. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **41**

**சுகாதாரம், பூச்சி தடுப்பு, மலேரியா, டெங்கு, சிக்கன் குனியா, போன்ற நோய் தாக்குதலை தடுப்பதற்கும், கொசுக்கள் மற்றும் நோய் பரப்பும் பூச்சிகளின் பெருக்கத்தை குறைக்கவும் / நோய்கள் பரவாமல் தடுப்பதற்கும் / கொசுக்களிடம் கொசுக்கொல்லி மற்றும் புகைப்பரப்பும் மருந்துகளின் எதிர்ப்பு சக்தியை கண்டறிவதற்கு செயல்முறை ஆய்வு கூடம் அமைக்கப்படும்.**

நோய் பரப்பும் பூச்சிகளின் பெருக்கத்தை குறைக்கவும் / நோய்கள் பரவாமல் தடுப்பதற்கும் / கொசுக்களிடம் கொசுக்கொல்லி மற்றும் புகைப்பரப்பும் மருந்துகளின் எதிர்ப்பு சக்தியை கண்டறிவதற்கு செயல் முறை ஆய்வு கூடம் அமைக்க கட்டடத் துறைக்கு 20.08.2024 அன்று கோப்பு (பொ.சு.பூ.த.ந.து.ந.க.எண்.எம்7/407/2024) கடிதம் அனுப்பப் பட்டது. **நிர்வாக காரணங்களால் பணி கைவிடப்பட்டது.**

அறிவிப்பு: **42**

**அடையாறு நகர்ப்புர சமூக சுகாதார மையத்தில், சிறப்பான மருத்துவ சேவை அளிக்கப்படுவதால், சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், இம்மருத்துவமைனையை, மண்டலத்திற்கு அடுத்துள்ள காலி இடத்தில் கூடுதலாக 70 படுக்கைகளுடன், மேம்பட்ட ஆபரேஷன் தியேட்டர் மற்றும் லிப்ட் வசதியுடன் மூன்று தளம் கொண்ட கட்டடம் ரூ.7.00 கோடி செலவில் கட்டப்படும்.**

கட்டட துறையின் வழியாக, அடையாறு நகர்ப்புர சமூக சுகாதார மையத்தில் கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு ரூ.8.75 கோடிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது, 31.01.2025 அன்று பணியாணை வழங்கப்பட்டது. பணி நடைபெற்று வருகிறது. **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **43**

**சைதாப்பேட்டை, அவசர சிகிச்சை மையத்தை சுற்றியுள்ள பொதுமக்களுக்கு, மருத்துவ சிகிச்சை பெறுவதற்கான தேவை அதிகரித்து வருவதால், தற்போதுள்ள கட்டடம் போதுமானதாக இல்லாததால், விசாலமான ஆபரேஷன் தியேட்டர், லேபர் ரூம், பிரசவத்திற்குப் பிந்தைய வார்டு, NBSU, அவசர சிகிச்சை மையம் ஸ்டோர் அறைகள், காத்திருப்பு கூடம், விரிவான ஆய்வக வசதிகளுடன் கூடுதலாக 70 படுக்கை வசதியுடன், மூன்று தளம் கொண்ட கட்டடமாக ரூ.7.00 கோடி செலவில் கட்டப்படும்.**

கட்டடத் துறையின் வழியாக, சைதாப்பேட்டை, அவசர சிகிச்சை மையத்தில் மூன்று தளத்துடன் கட்டடம் கட்டுவதற்கு ரூ.9.62 கோடிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இக்கட்டட பணிக்கு 30.12.2024 அன்று பணியாணை வழங்கப்பட்டது. பணி நடைபெற்றுவருகிறது. **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **44**

**பெருநகர சென்னை மாநகரை தூய்மையாக பராமரிக்கும் மிக முக்கிய பணிகளை மேற்கொள்ளும் தூய்மை, சுகாதாரம் மற்றும் சாலை பணியாளர்களின் உடல் நலனை பேணிகாக்கும் வகையில் அனைத்து நான்காம் நிலை களப்பணியாளர்களுக்கும் அரசு மருத்துவகல்லூரி மருத்துவ மனைகள் மூலம் முழு உடல் பரிசோதனை, பெருநகர சென்னை மாநகராட்சியின் செலவில் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் அடிப்படை தொழிலாளர்களின் நலன் காக்கப்படும். இதற்காக ரூ.8.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

பொ.சு.து.ந.க.எண்.சி14/4210/2024 நாள்:09.09.2024 அன்று ஆணையர் அவர்களின் ஆணை பெற்று 10.09.2024 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் நான்காம் நிலை ஊழியர்களுக்கு முழு உடல் பரிசோதனை முகாம் ஸ்டான்லி மருத்துவமனையில் மாண்புமிகு மேயர் அவர்கள் முன்னிலையில் துவங்கி வைக்கப்பட்டது. இதுவரை 8,272 பணியாளர்களுக்கு உடல் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **45**

**2024-2025-ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியில், தாய்மார்களுக்கான ஒரு மகப்பேறு சிறப்பு அழைப்பு மையம் அமைக்கப்படும். இம்மையத்தில் 5 செவிலியர்கள் பணியமர்த்தப்படுவர். இவர்கள் 15 மண்டலங்களில் இருந்து மகப்பேறு சிக்கல் உள்ள தாய்மார்களின் பட்டியலினை பெற்று வாரம் ஒருமுறை அவர்களை தொலைபேசி மூலம்அழைத்து அவர்களின் உடல் நலன் குறித்து விசாரித்து, அவர்களுக்கு மகப்பேறு சிக்கல் தொடர்பான அறிகுறிகள் ஏதேனும் இருப்பின், அவர்களுக்கு தகுந்த ஆலோசனைகளை அளிப்பர். தேவைப்படின் தாய்மார்களின் தேவைகள் மற்றும் நோய் தீவிரத்தின் தன்மையை பொறுத்து மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மகப்பேறு மையங்களுக்கு தெரிவித்து உடனடி சிகிச்சை அளிக்க உதவிடுவர்.**

2024-2025-ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியில், தாய்மார்களுக்கான ஒரு மகப்பேறு சிறப்பு அழைப்பு மையம் அமைப்பது சம்பந்தமாக ஆரம்பகட்ட நடவடிக்கையாக அனுபவம் மிக்க மருத்துவர்களுடன் ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றது. தேவையான தொலைதொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்டு, இப்பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு ஆரம்ப கட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. IT Cell மூலமாக மகப்பேறு தாய்மார்களின் தகவல்களை ஒரே இடத்தில் பெறும் வகையில் மென்பொருள் தயார் செய்யும் பணி நிறைவு பெற்றுள்ளது.மாண்புமிகு மேயர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **46**

**குழந்தைகளின் வளர்ச்சியில் தாமதங்கள் இருக்கும் பட்சத்தில் உரிய சிகிச்சைகளை அளிக்க அனைத்து மண்டலங்களிலும் ஒரு இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் (Early Intervention Center) அமைக்கப்படும். இம்மையங்களில் பேச்சு மற்றும் செவித்திறன் பயிற்சி போன்ற சேவைகள் அளிக்கப்படும்.**

1) (பொ.சு.து.ந.க.எண்.பி2/4894/2024) முதற்கட்டமாக வட்டாரத்திற்கு ஒரு இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் (Early Intervention Center) துவக்குவதற்கு, ஆணையரின் ஆணை 28.08.2024 நாளிட்டு பெறப்பட்டுள்ளது.
2) மண்டலம்–4ல் பெரம்பூர் UPHC, மண்டலம் – 9ல் C.P. ராமசாமி ரோடு UPHC, மண்டலம் – 13ல் திருவான்மியூர் UPHC ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ளது.
3) இந்த மையங்களுக்கு தேவையான பணியாளர்கள் பணியமர்த்தவும் மற்றும் மருத்துவ கருவிகள் உபகரணங்கள் கொள்முதல் செய்யவும் ஒப்பம் கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளது. **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **47**

**தென் சென்னை பகுதிகளில் சுற்றித்திரியும் மாடுகளை பிடித்து, அடைத்து அபராதம் வசூலிக்க பெருநகர சென்னை மாநகராட்சியின் தெற்கு வட்டாரத்தில் புதியதாக ஒரு மாட்டுத்தொழுவம் அமைக்கப்படும்.**

மண்டலம்-1, 2, 3, 4, 5, 8, 9, 10, 11, 12, 14 மற்றும் 15க்குட்பட்ட இடங்களில், மாட்டின் உரிமையாளர்கள் தங்களது, மாடுகளை பராமரித்துக் கொள்ள, நவீன மாட்டுக் கொட்டகைகள் அமைத்திட ஏதுவான இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. மாட்டு தொழுவம் அமைக்கும் பணிகள் துவக்கப்பட்டுள்ளது. **பணி நடைபெறுகிறது.**

# மருத்துவ சேவைகள் துறை

அறிவிப்பு: **48**

**பெருநகர சென்னை மாநகராட்சி பதினாறு Urban Community Health Centre UCHC மற்றும் மூன்று 24 மணி நேர மகப்பேறு மருத்துவமனைகளிலும் Continuous Cardiotocography CTG கருவி ஒவ்வொரு மருத்துவமனைக்கும் 2 வீதம் (19x2=38) எண்ணிக்கை மொத்த தொகை தோராயமாக ரூ.95.00 இலட்சம் மதிப்பீட்டில் TNMSC மூலமாக 2024-2025-ஆம் நிதியாண்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 16 நகர்ப்புற சமுதாய நல மையங்கள் மற்றும் மூன்று 24 மணி நேர மகப்பேறு மருத்துவமனைகளிலும் 38 எண்ணிக்கையிலான CTG (Continuous Cardiotocography) கருவிகள் TNMSC மூலமாக பெறுவதற்கு ஆணையரின் அனுமதி 13.03.25 நாளிட்டு பெறப்பட்டுள்ளது. இதற்காக ரூ.29.37 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மார்ச் மாத இறுதியில் CTG கருவிகள் கொள்முதல் செய்து பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும். **பணிகள் நடைபெறுகிறது.**

## இயந்திரப் பொறியியல் துறை

அறிவிப்பு: **49**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் பராமரிக்கப்படும் பூங்காக்கள் மற்றும் சாலை நடுவன்களில் உள்ள செடி கொடிகளுக்கு நீர் ஊற்றும் பொருட்டு கனரக வாகன அடிச்சட்டத்தின் மீது பொருத்தப்பட்ட டீசல் மூலம் இயங்கும் 6 எண்ணிக்கையில் தண்ணீர் டேங்கர் லாரிகள் (9 KL கொள்ளளவு) ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

6 எண்ணிக்கையிலான தண்ணீர் டேங்கர் லாரிகள் ரூ.1.74 கோடி செலவில் கொள்முதல் செய்ய பணியாணை வழங்கப்பட்டது. தற்போது 5 எண்ணிக்கையிலான தண்ணீர் டேங்கர் லாரிகள் பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒரு வாகனம் 20.03.2025க்குள் பெறப்படும். இதற்கான செலவினம் ரூ.1.74 கோடி. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **50**

**சென்னைப் பள்ளிகளில் பயிலும் 1,20,175 மாணவ, மாணவியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அவர்களை கல்வி சுற்றுலாவிற்கு அழைத்து செல்லும் பொருட்டு குறைந்தபட்சம் 45 இருக்கைகள் கொண்ட நான்கு எண்ணிக்கையிலான பள்ளி பேருந்துகள் ரூ.1.16 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.**

நான்கு எண்ணிக்கையிலான பள்ளி பேருந்து கொள்முதல் செய்யும் பணிக்கு 12.02.2025 நாளிட்டு பணியாணை வழங்கப்பட்டுள்ளது. 30.3.2025க்குள் வாகனங்கள் பெறப்படும். இதற்கான செலவினம் ரூ.1.11 கோடி. **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **51**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட, பல்வேறு பகுதிகளில் வளர்ந்துள்ள மரங்களில் உள்ள கிளைகள் நீண்டு வளர்வதால், பொது மக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறாக உள்ள மரக்கிளைகளை அகற்றி சீரமைக்கவும் மற்றும் புயல்/மழை போன்ற பேரிடர் காலங்களில் முறிந்து விழும் மரங்களை அகற்றிடவும், கூடுதலாக 6 எண்ணிக்கையில் ஹைட்ராலிக் மூலம் இயங்கும் மரம் அறுக்கும் இயந்திரம் ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

18.11.2024 அன்று பணியாணை வழங்கப்பட்டுள்ளது. 20.03.2025க்குள் 6 எண்ணிக்கையில் ஹைட்ராலிக் மூலம் இயங்கும் மரம் அறுக்கும் இயந்திரம் பெறப்படும்.இதற்கான செலவினம் ரூ.1.62 கோடி. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **52**

**இயந்திர பொறியியல் துறை மூலம் இயங்கும் வாகனங்கள் சாலைகளில் எதிர்பாராமல் பழுது ஏற்பட்டு நின்றுவிடும் நிலையில் அவ்வாகனங்களை மீட்டு பணிமனைக்கு எடுத்துச் செல்வதற்கும் மற்றும் சாலைகளில் போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களை உடனுக்குடன் அகற்றிடவும், 3 எண்ணிக்கையில் (வட்டாரத்திற்கு ஒன்று வீதம்) CNG மூலம் இயங்கும் மீட்பு வாகனம் (Recovery Vehicle) ரூ.1.07 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

22.11.2024 அன்று பணியாணை வழங்கப்பட்டுள்ளது. 1 எண்ணிக்கையிலான வாகனம் பெறப்பட்டது. மீதமுள்ள 2 வாகனங்கள் 25.03.2025க்குள் பெறப்படும். இதற்கான செலவினம் ரூ.1.03 கோடி. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **53**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அச்சக பிரிவில் விரைவாக அச்சுப்பணி மேற்கொள்ள புதியதாக இரண்டு எண்ணிக்கையில் Digital Duplicator Machine ரூ.25.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.**

30.08.2024 நாளிட்ட பணியாணை M/s Trinity Marketing நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு இரண்டு எண்ணிக்கையில் Digital Duplicator Machine ரூ.24.67 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டில் உள்ளது. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **54**

**பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அச்சகத்திற்கான கட்டடம் பழுதடைந்து இடிந்துவிழும் நிலையில் உள்ளதால் இக்கட்டடத்தினை இடித்து அகற்றிவிட்டு புதிய கட்டடம் ரூ.5.50 கோடி செலவில் கட்டப்படும்.**

கட்டடத் துறையின் வழியாக, அச்சகத்தில் புதிய கட்டுமான பணிகள் மேற்கொள்வதற்கு, மன்றத்தின் (மன்ற தீர்மான எண்.188/2024, நாள்.24.06.2024) அனுமதி பெற்று CMDA மூலம் பழைய கட்டடங்கள் இடிக்கப்பட்டது. விரைவில் CMDA மூலம் புதிய கட்டுமான பணிகள் துவக்கப்பட உள்ளது. **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **55**

**புதுப்பேட்டை, ஆதித்தனார் சாலையில் உள்ள ஆய்வு வாகன பணிமனையில் உள்ள அலுவலக கட்டடம் மிகவும் பழுதடைந்துள்ளதால், அக்கட்டடத்தை முழுவதுமாக இடித்துவிட்டு ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டப்படும்.**

ஆதித்தனார் சாலை ஆய்வு வாகன பணிமனையில் புதிய கட்டுமான பணிகள் மேற்கொள்ள கட்டடத்துறை மூலம் ரூ.5.40 கோடி மதிப்பீட்டிற்கு மன்றத்தில் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. M/s Pearl Construction என்ற நிறுவனத்திற்கு பணியாணை 27.02.2025 அன்று வழங்கப்பட்டுள்ளது. பணிகள் துவங்கப்பட உள்ளது.**பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **56**

**இயந்திர பொறியியல் துறை வாயிலாக கொள்முதல் செய்யப்படும் வாகனங்கள்/உபகரணங்கள் சிறப்பு தொழில் நுட்பம் வாய்ந்தவையாக உள்ளதால், அவற்றை சிறந்த முறையில் பராமரிக்கவும் மற்றும் தற்போதைய வாகன மேலாண்மை மற்றும் பராமரிப்பில் புகுத்தப்பட்டுள்ள புதிய தொழில்நுட்பத்தினை அறிந்திடவும், உதவி பொறியாளர்கள், இளநிலை பொறியாளர்கள், இயந்திர பழுதாளர்கள் மற்றும் தொழில் திறனற்ற உதவியாளர்கள் ஆகியோருக்கு, வாகன தயாரிப்பாளர்கள் மூலமாக தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சி அளிக்கப்படும்.**

உதவி பொறியாளர்கள், இளநிலை பொறியாளர்கள், இயந்திர பழுதாளர்கள் மற்றும் தொழில் திறனற்ற உதவியாளர்கள் ஆகியோருக்கு, தொழில் நுட்பம் சார்ந்த பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பணி தொடர்பணி ஆகும், பயிற்சி அளிப்பது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. **பணி முடிவுற்றது.**

## மழைநீர் வடிகால் துறை

அறிவிப்பு: 57

**2024-25 ஆம் ஆண்டில் பெருநகர சென்னை மாநகரில் உள்ள 8 நீர்நிலைகளை ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும். இதனால் நீர்நிலைகளின் சேமிப்புத் திறன் அதிகரிப்பதால் நிலத்தடி நீர்மட்டமும் அதிகரிக்கும். நீர்நிலைகள் சுற்றி உள்ள இடங்களில் மழைநீர் தேங்குவது தவிர்க்கப்படும்.**

9 நீர்நிலைகளை புனரமைக்கும் பணியை மேற்கொள்ள ரூ.7.08 கோடி மதிப்பீட்டிற்கு, (கோப்பு எண் : S.W.D.C.B2/2934/2024ன்படி) நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. 10.10.2024 நாளிட்டு பணியாணை வழங்கப்பட்டது. நீர்நிலைகளை புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: 58

**2024-25 ஆம் ஆண்டில் மண்டலம் 2, மாத்தூர் எம்.எம்.டி.ஏ காலனியில் உள்ள குளத்தினை பரிச்சார்த்த முறையில் ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் Sponge park-ஆக வடிவமைக்கப்படும். இதனால் மழை காலங்களில் மழைநீர் சேகரிக்கும் குளமாகவும் சுற்றியுள்ள நிலத்தடி நீர்மட்டம் உயரவும், இப்பகுதிகளில் மழைநீர் தேங்குவதும் தவிர்க்கப்படும். மேலும் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள பூங்காக்களில் Sponge park அமைக்க ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கை தயாரித்து Sponge park அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் கீழ் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. வருவாய் நிர்வாக ஆணையருக்கு 21.05.2024 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ரூபாய் 7.98 கோடி மதிப்பீட்டிற்கு ஆணையரின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. 16.04.2025 அன்று ஒப்பம் திறக்கப்பட உள்ளது. **பணி நடைபெறுகிறது,**

## கட்டடம்

அறிவிப்பு: **59**

**பெருநகர சென்னை மாநகராட்சியால் 192 மயான பூமிகள் பராமரிக்கப்படுகிறது. இம்மயான பூமிகள் இயற்கை எழிலுடன் சுகாதாரமான முறையில் அடிப்படை வசதிகளுடன் மேம்படுத்துவதால், இறந்தவரின் இறுதி சடங்குகளில் கலந்துக்கொள்ளும் உற்றார் உறவினர்கள் மன அமைதியுடன் இருக்கைகளில் அமர்ந்து மன நிறைவுடன் இறுதி அஞ்சலி செலுத்தும் வகையில், மயான பூமிகள் ரூ.10.00 கோடி செலவில் நவீனப்படுத்தப்படும்.**

7 எண்ணிக்கையிலான மயான பூமிகளை மேம்படுத்த ரூ.12.00 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 05.11.24 அன்று பணியாணை வழங்கப்பட்டது. **பணிகள் நடைபெறுகிறது.** மேலும், 26 எண்ணிக்கையில் சுமார் ரூ.30.00 கோடி மதிப்பீட்டில் மயான பூமிகளை மேம்படுத்தும் பணிக்கு மன்றத்தின் அனுமதி பெற்று பணியாணை வழங்கப்பட்டது. **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **60**

**1 முதல் 15 மண்டல அலுவலகம் மற்றும் மூன்று வட்டார துணை ஆணையர் அலுவலகங்களில், "தமிழ் வாழ்க" "தமிழ் வளர்க" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட பெயர் பலகை மொத்தம் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் அந்தந்த மண்டல அலுவலகங்கள் மூலம் அமைக்கப்படும்.**

கட்டடத் துறையின் மூலமாக 1 முதல் 15 வரையுள்ள அனைத்து மண்டலங்களிலும், "தமிழ் வாழ்க தமிழ் வளர்க" பெயர் பலகை அமைக்கப்பட்டுள்ளது. **பணிகள் முடிவுற்றது.**

அறிவிப்பு: **61**

**பழுது ஏற்பட்டிருக்கும், 201 சென்னை மாநகராட்சி பள்ளிகளின் கட்டடங்களின் மேற்தளங்களை முன்னுரிமையின் அடிப்படையில் Epoxy Water Proofing என்ற தொழில்நுட்பத்தின் மூலம் மறுசீரமைப்பு பணிகள் ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும்.**

ரூ.35.00 கோடி மதிப்பீட்டில் 142 பள்ளிகளை சீரமைக்க 19.08.2024 அன்று ஒப்பம் கோரப்பட்டு 01.10.24, 04.11.24, 05.11.24 & 06.11.24 அன்று பணியாணை வழங்கப்பட்டது. இதுவரை 22 பள்ளிகளில் பணிகள் முடிவுற்றது. மற்ற பள்ளிகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன.**பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **62**

**255 சென்னை பள்ளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த சின்னம் அச்சிடப்பட்ட பெயர் பலகைகள் புதிதாக CITIIS Norms மூலம் அமைக்கப்படும்.**

155 பள்ளிகளில் பெயர் பலகை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 265 பள்ளிகளில் பெயர் பலகை அமைக்க 04.12.2024 அன்று பணியாணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. **பணி நடைபெறுகிறது.**

## பாலங்கள் துறை

அறிவிப்பு: **63**

**2024-2025-ஆம் நிதியாண்டில் மண்டலம்-8 வார்டு-106 சென்னை, சூளைமேடு, இந்திரா காந்தி 2-வது தெருவில் விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பழைய பாலத்தை இடித்துவிட்டு ரூ.2.32 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் அமைக்கப்படும்.**

பா.து.ந.க.எண்.பி3/0765/2024 **-** இந்திரா காந்தி 2-வது தெரு, விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பழைய பாலத்தை இடித்துவிட்டு புதிய பாலம் கட்டும் பணிக்கு ரூ.2.32 கோடிக்கு தீர்மான எண்.81/2024ன்படி 20.09.2024 அன்று நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. பணியாணை 03.01.2025 அன்று வழங்கப்பட்டது. பணி நடைபெற்று வருகிறது. **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **64**

**2024 2025 ஆம் நிதியாண்டில் மண்டலம்-8, வார்டு -106 சென்னை, சூளைமேடு, கண்ணகி தெருவில் விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பழைய பாலத்தை இடித்து விட்டு ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் அமைக்கப்படும்.**

பா.து.ந.க.எண்.பி3/0766/2024ன்படி சூளைமேடு, கண்ணகி தெருவில் விருகம்பாக்கம் கால்வாயின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பழைய பாலத்தை இடித்து விட்டு புதிய பாலம் கட்டுவதற்கு ரூ.2.25 கோடி மதிப்பீட்டிற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி (தீர்மான எண்.80/2024, நாள்.20.09.2024) பெற்று 21.01.2025 அன்று பணியாணை வழங்கப்பட்டுள்ளது. பணி நடைபெற்று வருகிறது. **பணி நடைபெறுகிறது.**

## பூங்காத் துறை

அறிவிப்பு: 65

**சிறந்த விளையாட்டு வீரர் உருவாக வேண்டுமெனில் அவர்கள் பயிற்சி பெறுவதற்கு சிறந்த விளையாட்டுத் திடல்கள் அவசியம். இதனை கருத்தில் கொண்டு, மண்டலம் 2 ல், கோட்டம் 19-க்குட்பட்ட மாத்தூர் MMDA, 2வது பிரதான சாலையில் ஒரு Mini Stadium அமைக்கப்படும். மேலும், பல்வேறு இடங்களில் உள்ள 19 விளையாட்டுத் திடல்கள் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கும் விதமாக ரூ.**5.00** கோடி மதிப்பீட்டில் **34** எண்ணிக்கையிலான விளையாட்டுத் திடல்களை மேம்படுத்தும் பணிக்கு பணியாணை வழங்கப்பட்டது. மண்டல அளவில் பணி நடைபெற்று வருகிறது. **பணி நடைபெறுகிறது**

| | | |
|---|---|---|
| **மொத்த பணிகள்** | **:** | **34** |
| **நடைபெறும் பணிகள்** | **:** | **34** |

அறிவிப்பு: 66

**2024-2025-ஆம் நிதியாண்டில், சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலையோரங்கள், திறந்த வெளிகள், பூங்காக்கள் ஆகிய இடங்களில் 2.50 இலட்சம் மரக்கன்றுகளை தன்னார்வலர்கள் மூலம் நடப்பட்டு அவைகளை முறையாக பராமரித்து பேணி காக்கப்படும். இதனால் நகரத்தின் மாசு கட்டுப்படுத்தப்படும்.**

சென்னை மாநகரை பசுமையாக்கி அழகுபடுத்த குடியிருப்பு நல சங்கங்களுடன் இணைந்து:-

1. 07.05.2021 முதல் 31.03.2023 வரை 2,63,742 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

2. 01.04.2023 முதல் 31.03.2024 வரை 41,525 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன
3. 01.04.2024 முதல் 17.12.2024 வரை 68,815 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன

மேலும், சுற்று சூழலை மேம்படுத்தும் வண்ணம் மரக்கன்றுகள் நடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.(இது தொடரும் பணி)**பணி முடிவுற்றது**.

அறிவிப்பு: **67**

**2024-2025-ஆம் நிதியாண்டில், பக்கிங்காம் கால்வாய் (Central Buckingham Canal) ஒட்டியுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள 6 இடங்களில் சாலையோர பூங்காக்களை அழகுபடுத்தும் பணிகள் ரூ.4.33 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

1. **நாவலர் நகர்- லாக் நகர் (இரண்டு பக்கமும்),**
2. **2.வாலாஜா சாலையிலிருந்து பாரதி சாலை,**
3. **3. பாலாண்டியம்மன் கோயில் தெரு,**
4. **4. சிங்காரவேலர் பாலத்திலிருந்து- கைலாசபுரம் பாலம்.**
5. **5. பக்கிங்காம் கால்வாய் தெரு, முன்டகக் கண்ணியம்மன் பாலம்.**
6. **6. கனால் பேங்க் ரோடு மைலாப்பூர் பாலம் மந்தைவெளி பாலம் (இரண்டு பக்கமும்).**

1) நாவலர் நகர்- லாக் நகரில் 205 மீட்டர் நீளத்தில் 30% கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன. மின்சாரம் மற்றும் அழகுபடுத்தும் பணி நடைபெற்று வருகின்றன.
2) வாலாஜா சாலையிலிருந்து பாரதி சாலை வரை 425 மீட்டர் நீளத்திற்கு கட்டுமானப் பணி நடைபெற்று வருகின்றன.

3) பாலாண்டியம்மன் கோயில் தெருவில் 110 மீட்டர் நீளத்தில் 30% கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன. மின்சாரம் மற்றும் அழகுபடுத்தல் பணி நடைபெற்று வருகின்றன.

4) சிங்காரவேலர் பாலத்திலிருந்து- கைலாசபுரம் பாலம் வரை 110 மீட்டர் நீளத்திற்கு அழகுபடுத்தும் பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது.

5) பக்கிங்காம் கால்வாய் தெரு முன்டகக் கண்ணியம்மன் கோயில் தெரு MRTS பாலம் வரை 367மீட்டர் நீளத்திற்கு 30% கட்டுமான பணி நடைபெற்று வருகின்றன.

6) கெனால் பேங்க் ரோடு மைலாப்பூர் மற்றும் மந்தைவெளி பாலங்களின் இரண்டு பக்கமும் 200 மீட்டர் நீளத்திற்கு பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது. **பணிகள் நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **68**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் ஆண்களுக்கான உடற்பயிற்சிக் கூடம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. பெண்களுக்கான பிரத்தியேக உடற்பயிற்சி கூடம் ஏதும் இல்லை என்ற குறையை போக்க ஒரு வார்டுக்கு ஒன்று என்ற வீதத்தில் பெண்களுக்கான "EmpowHER உடற்பயிற்சி கூடம்"200 வார்டுகளிலும் ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

பெண்களுக்கான **"EmpowHER** உடற்பயிற்சிக்கூடம் 36 எண்ணிக்கையில் ரூ.9.97 கோடி மதிப்பீட்டில் அமைக்க பணியாணை வழங்கப்பட்டது. மண்டல அளவில் பணி நடைபெற்று வருகிறது. **பணி நடைபெறுகிறது**

| | | |
|---|---|---|
| **மொத்த பணிகள்** | **:** | **36** |
| **நடைபெறும் பணிகள்** | **:** | **36** |

## வருவாய் துறை

அறிவிப்பு: **69**

**பெருநகர சென்னை மாநகராட்சி வருவாய் துறையில் வழங்கப்படும் மதிப்பீட்டு ஆணைகளான புதிய மற்றும் கூடுதல் சொத்துவரி மதிப்பீடு, சொத்துவரி பெயர் மாற்றம் / திருத்தம், புதிய மற்றும் புதுப்பிக்கும் தொழில் உரிமங்கள் QR Code தொழில்நுட்பத்தில் வழங்கப்படும், இதன் வாயிலாக ஆணைகளின் உண்மைத் தன்மையை கண்டறியலாம்.**

QR Code தொழில்நுட்பம், மாண்புமிகு மேயர் அவர்களால் 14.08.2024 அன்று துவக்கி வைத்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **70**

**சொத்து உரிமையாளர்கள் மற்றும் வணிகர்கள் தங்களுக்கு வேண்டிய சொத்துவரி மதிப்பீடுகள், பெயர் மாற்ற ஆணைகள், தொழில் உரிமங்கள்,போன்ற ஆணைகளை பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள வழிவகை செய்யப்படும்.**

சொத்து உரிமையாளர்கள் மற்றும் வணிகர்கள் பல்வேறு வரிகள், உரிமங்கள் மற்றும் ஆணைகளை, பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளும் மென்பொருளை மாண்புமிகு மேயர் அவர்களால் 14.08.2024 அன்று மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. **பணி முடிவுற்றது.**

## திடக்கழிவு மேலாண்மை

அறிவிப்பு: **71**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் 200 வார்டுகளில், வார்டுக்கு ஒரு தெரு தேர்வு செய்யப்பட்டு அத்தெருவில் வசிக்கும் மக்கள் 100 சதவீதம் குப்பையை தரம் பிரித்து தரும் வகையில் அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இதனை முன் மாதிரியாக கொண்டு அனைத்து பொது மக்களும் தங்களது வீட்டிலிருந்து வெளியேற்றும் குப்பைகளை "மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை" என தரம் பிரித்து வழங்க விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.**

வார்டுக்கு ஒரு தெரு என 200 வார்டுகளுக்கு 200 தெருக்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது, அத்தெருக்களில் உள்ள வீடுகளிலிருந்து, குப்பைகளை 100% தரம் பிரித்து பெறும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. **பணி முடிவுற்றது. (தொடர்பணி)**

அறிவிப்பு: **72**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் 102 எண்ணிக்கையில் டிப்பர் வாகனங்கள் உள்ளன. இவ்வாகனங்கள் அனைத்து வார்டுகளில் உள்ள மரக்கழிவுகள் மற்றும் கட்டட இடிபாடுகள் அகற்ற பயன்படுத்தப்படுகின்றன. அவ்வாகனங்கள் கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங்களுக்கு செல்லும் போது மரக்கழிவுகள் மற்றும் கட்டட இடிபாடுகள் தெருக்களில் சிதறுவதை தவிர்க்கும் விதத்தில் அனைத்து வாகனங்களுக்கும் மீன் வலைகள் 2024-2025-ஆம் நிதியாண்டில் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

04.10.2024 அன்று 110 எண்ணிக்கையிலான மீன் வலைகள் ரூ.8.17 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து சம்மந்தப்பட்ட லாரி நிலையங்களுக்கு தேவைக்கேற்ப பிரித்து வழங்கப்பட்டது. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **73**

**பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குள் வசிக்கும் / பயணிக்கும் பொது மக்கள் தாங்கள் இருக்கும் இடத்திற்கு அருகாமையில் இருக்கும் பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் பொதுக்கழிப்பிடங்கள் இருக்கும் இடத்தினை அறியும் வகையில் புதிய அலைபேசி வலைதள செயலி உருவாக்கி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.**

மருத்துவமனை மற்றும் பொது கழிப்பிடங்களை பொது மக்கள் அறியும் வகையில் புதிய அலைபேசி மென்பொருள் செயலி EDP cell மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது புதிய மென்பொருள் செயல்பாட்டை பரிசோதிக்கும் பணி நடைபெற்று வருகிறது. **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **74**

**பெருநகர சென்னை மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள 1,347 நிழற்குடைகளில் பொது மக்களின் பயன்பாட்டிற்கேற்ப குப்பைகளை தரம் பிரித்து கொட்டும் வகையில் புதிய வகையிலான மூடியுடன் கூடிய இரண்டு குப்பைத் தொட்டிகள் வைக்கப்படும். இதற்காக ரூ.1.35 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

இரண்டு வகையான மூடியுடன் கூடிய 1,350 எண்ணிக்கையிலான குப்பைத் தொட்டிகள் ரூ.2.40 கோடி மதிப்பீட்டிற்கு இரண்டு பகுதிகளாக நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. இதன்படி திட்டம்-1க்கு 814 குப்பைத் தொட்டிகளுக்கு மட்டும் ஒப்பம் பரிசீலனையில் உள்ளது. மீதமுள்ள குப்பைத் தொட்டிகள் கொள்முதல் செய்யும் பணிக்கு விரைவில் ஒப்பம் கோரப்பட உள்ளது. **பணி நடைபெறுகிறது.**

## பேருந்து சாலைகள்

அறிவிப்பு: **75**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் (NSMT, TURIF மற்றும் SFC etc.,) திட்டங்களின் கீழ் 4750 எண்ணிக்கையிலான சாலைகள் மற்றும் நடைபாதைகள் மேம்படுத்தும் பணி ரூ.404.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

1) SFC நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள ரூ.150.00 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்று 22.02.2024 அன்று பணியாணை வழங்கப்பட்டது. 1,114 பணிகள் முடிவுற்றது. 6 பணிகள் நடைபெற்று வருகிறது. (Physical Progress- 97.55%) பணிச் செலவினம் ரூ.112.54 கோடி.

2) TURIF மற்றும் NSMT நிதியில் ரூ.254 கோடி மதிப்பீட்டிற்கு 17.08.2024 அன்று பணியாணை வழங்கப்பட்டது. TURIF நிதியில் 829 பணிகள் முடிவுற்றது, 83 பணிகள் நடைபெறுகிறது (Physical Progress- 79.48%) பணிச் செலிவினம் ரூ.57.61 கோடி. NSMT நிதியில் 806 பணிகள் முடிவுற்றது 72 பணிகள் நடைபெற்று வருகிறது (Physical Progress- 78.4%).பணியின் செலவினம் ரூ.62.46 கோடி. **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **76**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேதமடைந்த சாலைகளில் ஒட்டுப்பணிகள் மேற்கொள்ள Cold Mix Injection Pothhole Repairing Machine பெருநகர சென்னை மாநகராட்சியால் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு ஒப்பந்ததாரர் கொண்டு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படும்.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேதமடைந்த சாலைகளில் ஒட்டுப்பணிகள் மேற்கொள்ள Cold Mix Injection Pothole Repairing Machine பெருநகர சென்னை மாநகராட்சியால் ரூ.6.27 கோடி மதிப்பீட்டில் கொள்முதல் (ம) பராமரிப்பு பணிகள்மேற்கொள்வதற்கு 10.09.2024 அன்று ஆணையரின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. ஆனால், புதிதாக இயந்திரம் கொள்முதல் செய்து Raw Materials மற்றும் பராமரிப்பு செலவுகளுக்கான தொகையை கணக்கிட்டால், வாடகை முறையில் எடுத்து பணியினை மேற்கொள்வதால் ஆகும் செலவினம் குறைவாக உள்ள காரணத்தால் புதிய Cold Mix Injection Pothole patching repairing machine இயந்திரம் கொள்முதல் செய்யும் பணியினை கைவிட 04.11.2024 அன்று ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. **நிர்வாக காரணங்களால் பணி கைவிடப்பட்டது.**

அறிவிப்பு: **77**

**2024 2025 ஆம் நிதியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைகள் தொடங்கும் கீழ்கண்டுள்ள 5 பிரதான சாலைகளில் நுழைவு வாயில்கள் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும். 1) ECR சாலை, அக்கரை, 2) OMR சாலை, செம்மஞ்சேரி, 3) GST சாலை, மீனம்பாக்கம், 4) Mount Poonamallee சாலை, S.R.M.C மருத்துவமனை, 5) GNT ரோடு, மாரியம்மாள் நகர், புழல்.**

கிழக்கு கடற்கரை சாலை, **OMR சாலை, மவுன்ட் பூந்தமல்லி சாலை ஆகிய இடங்களில், நுழைவு வாயில் அமைக்கும் பணி கைவிடப்பட்டுள்ளது** (Due to elevated Corridor and CMRL Projects), GST சாலையில் ரூ.83.23 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் GNT சாலை மாரியம்மாள் நகரில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டிலும் நுழைவு வாயில் அமைக்கும் பணிக்கு, ஆணையரின் நிர்வாக அனுமதி பெற்று பணியாணை வழங்கப்பட்டது.பணி நடைபெற்று வருகிறது. **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **78**

**மண்டலம் – 5 தங்கசாலை மேம்பாலத்தின் கீழ் பகுதியில், மண்டலம்– 9ல் பீட்டர்ஸ் சாலை, கான்ரான்ஸ்மித் சாலை மற்றும் வெஸ்ட் காட் சாலையில் உள்ள மேம்பாலங்களின் கீழ்பகுதியினை ரூ.2.85 கோடி செலவில் அழகுபடுத்தும் பணி மேற்கொள்ளப்படும்.**

மண்டலம் – 5 தங்கசாலை மேம்பாலத்தின் கீழ் பகுதியில் அழகுபடுத்தும் பணிக்கு ரூ.1.01 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்டது. பணி நடைபெற்று வருகிறது.

மண்டலம்-9ல் பீட்டர்ஸ் சாலை கான்ரான்ஸ்மித் மேம்பாலத்தின் கீழ் பகுதியினை அழகுபடுத்தும் பணிக்கு ரூ.2.87 கோடிக்கு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. ஒப்பம் பரிசீலனையில் உள்ளது. விரைவில் பணியாணை வழங்கப்பட்டு சிறப்பு திட்டங்கள் துறை மூலம் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **79**

**மண்டலம் 1 பேருந்து நிழற்குடைகள், முதல் 15 வரையில் உள்ள 704 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகள் மற்றும் 61 Concessionaire காலம் முடிந்த பேருந்து நிழற்குடைகள், ஆக மொத்தம் 765 பேருந்து நிழற்குடைகள் தனியார் பங்களிப்புடன் (Public-Private Partnership முறையில்) பழுதுபார்த்தல், மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் பணிகளை செய்தும், விளம்பர பலகைகள் பொருத்தியும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் கீழ்பகுதியினை ரூ.2.85 கோடி செலவில் அழகுபடுத்தும் பணி மேற்கொள்ளப்படும்.**

பேருந்து நிழற்குடைகள் அமைக்க 06.02.2025 அன்று ஒப்பம் கோரப்பட்டது. ஒப்பந்ததாரர்கள் யாரும் பங்கேற்காததால், இப்பணி ரத்து செய்யப்பட்டுள்ளது. தற்போது இப்பணிகள் மூலதன நிதியின் கீழ் நிழற்குடைகள் பராமரிக்கவும் மற்றும் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. **இப்பணி நிர்வாக காரணங்களால் கைவிடப்பட்டது.**

## மன்றத்துறை

அறிவிப்பு: **80**

**2024 2025 ஆம் நிதியாண்டு முதல் பெருநகர சென்னை மாநகராட்சி மாண்புமிகு மேயர் சிறப்பு மேம்பாட்டு நிதி ரூ.2.00 கோடியிலிருந்து ரூ.3.00 கோடியாகவும் உயர்த்தப்படும்.**

மாண்புமிகு மேயர் மேம்பாட்டு நிதி ரூ.2.00 கோடியிலிருந்து ரூ.3.00 கோடியாகவும் உயர்த்துவதற்கு, ஆணையர் ஒப்புதல் பெற்று நிதி நிர்வாகப்பிரிவு மூலம் அரசுக்கு அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. **பணி நடைபெறுகிறது.**

அறிவிப்பு: **81**


**2024 2025 ஆம் நிதியாண்டு முதல் பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டு நிதி ரூ.40.00 இலட்சத்திலிருந்து ரூ.50.00 இலட்சமாக உயர்த்தப்படும்.**

ஆணையர் ஒப்புதல் பெற்று நிதி நிர்வாகப்பிரிவிலிருந்து ஒரு மாமன்ற உறுப்பினரின் வார்டு மேம்பாட்டு நிதி ரூ.50.00 இலட்சம் வீதம் 200 வார்டுகளுக்கு ரூ.100.00 கோடி2024-2025 நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. **பணி முடிவுற்றது.**

அறிவிப்பு: **82**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட, மண்டலம்-1 முதல் 15 வரை உள்ள 200 வார்டுகளில் உள்ள பணிகளை மேம்படுத்தவும், காகிதமில்லா நடைமுறையினை கொண்டு வருவதற்கும், அவசியம் கருதியும், ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் 200 எண்ணிக்கையிலான TAB கொள்முதல் செய்து மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.**

I.T.C.C.C2/555/2024- பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 200 எண்ணிக்கையிலான TAB மன்றத்துறை மூலம் மாமன்ற உறுப்பினர்களுக்கு மாண்புமிகு மேயர் அவர்களால் 29.10.2024 அன்று வழங்கப்பட்டது. **பணி முடிவுற்றது.**



C.P.P. 449(3) 2025-2026 / F.M.U/ 400 Bks of 26 Lvs / Mar - 2025